**23. அதிசூரன் கதை**

அதிசூரன் என்பவன்சோழவள நாட்டில் எயினனூரில் சான்றார் குலத்தில் தோன்றியவன். பொறாமை, வஞ்சகம், கொடுமை முதலியதீக்குணங்கள் பொருந்தப் பெற்றவன். இவன் காலத்தில் ஏனாதிநாதர் என்பவர் ஒரு வர் இருந்தார். இவரும்சான்றார் குலத்தில் தோன்றியவர். இறைவனிடத்திலும் அவனடியாரிடத்திலும் நிறைந்த அன்பு கொண்டவர். வாள் வித்தையிலும் வல்லவர். அதனைப் பிறருக்குப் பயிற்றுவித்து அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு அடியவர்கட்கும் அமுதூட்டித் தம் முடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார். அதிசூரனும் இவருடைய தொழிலையே மேற்கொண்டவன்.



இவர் தன்னினுஞ் சிறந்து விளங்குதலும் பொருள் வருவாயை மிகுதியாக அடைதலும் இவனுக்கு மிகுந்த பொறாமையை உண்டாக்கின. வாட்போர் செய்து ஏனாதியாரைப்பல முறைவெல்லப் பார்த்தான். முடியவில்லை. வஞ்சகமாகக் கொன்றுவிடுவதென்று இறுதியில் முடிவு செய்தான். போர்செய்தற்குத் தனியிடம் ஒன்றுக்கு வருமாறு அழைத்தான். அவரும்: இவன் அழைத்தபடியே சென்றார். நீறு பூசியவர்கட்கு ஏனாதியார் யாதுந் துன்பஞ் செய்யார் என்பதை அறிந் திருந்தான். தன் நெற்றி நிறையத்திருநீற்றைப் பூசிச் சிவனடியார்போல் கோலங்கொண்டு அவரிடஞ் சென்றான். அண்மையிற் சேரும் வரைமுகத்தை மூடிக்கொண்டிருந்தான். பக்கத்திற் சென்றதும் தன் மறைப்பை நீக்கித் தன்னுடைய அடியார்கோலத்தை அவருக்குக் காட்டி னான். அவர் இவன் அடியாராகி விட்டதாக முடிவு செய்து வாளை இவன் மீதுவீசாதிருந்தார். இவனோ அவரைக் கொன்று வீழ்த்திவிட்டான். தன்னுடைய மனமானது தான் அறியுமாறுகுற்றத்துட் பொருந்தியிருக்கும்போது மிகச் சிறந்த பொய்க்கோலம் யாது பயனைச் செய்யும் ? எத்தகையபயனையுஞ் செய்யாது என்பது இவனிடத்தில் நன்கு விளங்கியது.

[தவம் மறைந்து அல்லவை செய்தல்]

(பெரியபுராணம்)